




# அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்

தலைமைக் கழகம்

எண் : 15, வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை - 600 014

தொலைப்பேசி : 044 - 28481235

டிடிவி தினகரன்

பொதுச்செயலாளர்


"தமிழகம் தலைநிமிரட்டும், தமிழர் வாழ்வு மலரட்டும்"

தேதி : 25.04.2024

**பொதுமக்களின் தாகத்தை தணிக்கும் வகையில்
குடிநீர் மற்றும் நீர் மோர் பந்தல்களை அமைத்திடுங்கள் –
கழக உடன்பிறப்புகளுக்கு அன்பு வேண்டுகோள்.**

தமிழ்நாட்டில் கடந்த சில தினங்களாக கோடை வெயிலின் தாக்கம் மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது. மேலும் சில தினங்களுக்கு வெப்ப அனல் வீசக்கூடும் என வானிலை ஆய்வுமையம் எச்சரிக்கை விடுத்திருக்கும் நிலையில் பொதுமக்களின் தாகத்தை தணிக்கும் வகையில் **கழக உடன்பிறப்புகள் தாங்கள் வசிக்கும் பகுதிகளில் ஆங்காங்கே குடிநீர் மற்றும் நீர்மோர் பந்தல்களை திறந்திடுமாறு வேண்டுகிறேன்.**

**அம்மா மக்கள் முன்னேற்றக் கழக உடன்பிறப்புகளால் அமைக்கப்படும் குடிநீர் மற்றும் நீர்மோர் பந்தல்கள் சுட்டெரிக்கும் வெயிலில் பொதுமக்களுக்கும், வாகன ஓட்டிகளுக்கும் பயனளிக்கும் வகையில் அமைந்திட வேண்டும்.**

தகுந்த இடங்களை தேர்வு செய்து எளிமையான முறையில் குடிநீர் மற்றும் நீர் மோர் பந்தல்களை அமைப்பதோடு, அவ்வப்போது ஆய்வு மேற்கொண்டு சுகாதாரமான முறையில் செயல்படுவதை உறுதி செய்ய வேண்டும் எனவும் கழக உடன்பிறப்புகளை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**டிடிவி தினகரன்**